www.tamilarangam.net




# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அரசியல் தொடர்

அற்புதன் எழுதுவது

## வடக்கில் தொடர்ந்து விமானக் குண்டு வீச்சுகள்!

இந்திய மத்திய அரசை திருப்தி செய்வதற்கு தமிழ் நாட்டில் புலி வேட்டை நடத்துவதாக காண்பித்தார் கலைஞர் கருணாநிதி.

புலிகளைவிட ஏனைய இயக்கத்தினரே கைதானது அதிகம். அதேசமயம் காயமடைந்து மருத்துவ சிகிச்சைக்காக தமிழகம் சென்றிருந்த புலிகள் சிலரும் கைது செய்யப்பட்டனர்.

எப்படியாவது கலைஞர் அரசை கலைக்க வேண்டும் என்று ஜெயலலிதா பிடிவாதம் காட்டி வந்தார். ஆகவே, கலைஞர் எடுத்த நடவடிக்கைகள் மத்திய அரசை திருப்தி செய்யவில்லை.

1991 ஜனவரியில் தி.மு.க. அரசு கலைக்கப்பட்டது. ஜெயலலிதாவின் பிடிவாதம் ராஜீவ் காந்தி ஊடாக வென்றது.

தி.மு.க. அரசை கலைக்க ஒரு காரணம் தேவைப்பட்டது. புலிகள் மீது பழியைப் போட்டுவிட்டு கலைத்து முடித்தனர்.


'எலியாக வாழ்வதைக் காட்டிலும் புலியாக வாழ்வதே மேல்' என்று தமது ஆட்சி கலைக்கப்படுவதற்கு சில நாட்களுக்கு முன்னர் கூறியிருந்தார் கலைஞர்.

எனினும் ஆட்சி கலைக்கப்பட்டது அவருக்கே அதிர்ச்சிதான்.

கலைஞர் ஆட்சி கலைக்கப்பட்டதை நியாயப்படுத்தும் விதமாக தமிழ் நாட்டில் இலங்கைத் தமிழர்கள் பலர் கைது செய்யப்பட்டனர். அனைவரும் புலிச் சந்தேக நபர்கள் என்று கூறப்பட்டனர்.

ஆளுநர் ஆட்சியில் சட்டம், ஒழுங்கை காப்பாற்ற துரித நடவடிக்கை எடுக்கப்படுவதுபோல காண்பிக்க, புலி வேட்டை முடுக்கிவிடப்பட்டது.

தி.மு.க. அரசை புலிகளைக் காரணம் காட்டி கலைப்பதற்கு ராஜீவ்காந்தியே முன்னின்றார் என்பதை புலிகள் அறிந்தனர்.



இலங்கை, இந்திய ஒப்பந்தம், இந்தியப் படைக்கால நடவடிக்கைகள் போன்றவற்றால் ராஜீவ் காந்திமீது புலிகள் அதிருப்தி கொண்டிருந்தனர்.

தமது பெயரைக் கூறி தி.மு.க அரசை கலைக்க ராஜீவ் துண்டுகோலாக இருந்தமை புலிகளுக்கு அவர்மீது மேலும் கசப்பை ஏற்படுத்தியது.

ஆளுநர் ஆட்சியில் புலிகளை தமிழ் நாட்டில் கட்டுப்படுத்தி விட்டதாக கூறப்பட்டது. ஆனால் புலிகள் அங்கு சுதந்திரமாக நடமாடிக் கொண்டிருந்தனர்.

இந்திய மத்திய அரசின் புலனாய்வு நிறுவனங்களுக்கும், தமிழக அரசின் புலனாய்வு நிறுவனங்களுக்கும் புலிகளது தங்குமிடங்கள், நடமாட்டங்கள் பற்றிய முழு விபரங்களும் தெரிந்திருக்கவில்லை.

## அரசு கூறிய செய்தியும் நேரில் கண்ட உண்மைகளும்

அதனால்தான் ஆளுநர் ஆட்சியிலும் புலிகளின் செயற்பாடுகள் தமிழ்நாட்டில் முடங்கிப்போகவில்லை.

### குண்டு வீச்சுக்கள்

யாழ் குடாநாட்டை கைப்பற்ற பல்வேறு முயற்சிகள் செய்தும் பயனற்று போனதால், விமானக் குண்டுவீச்சுக்களில் ஈடுபட்டனர் படையினர்.

யாழ் குடாவின் வான் பரப்பில் விமானங்கள் சீறிப்பறந்தன. குண்டுகள் பொழியப்பட்டன.

'புலிகளின் முகாம்கள் அழிக்கப்பட்டன. பெருந்தொகையான புலிகள் கொல்லப்பட்டனர்' என்று அரசும், அதன் பிரசார சாதனங்களும் கூறின.

வல்வெட்டித்துறையில் விமானப் படையினர் நடத்திய குண்டு வீச்சில் பெருமளவான பொதுமக்களின் உடமைகள் நாசமாகின.

பதுங்கு குழிகளுக்குள் மக்கள் சென்றதால் பெருமளவான உயிரிழப்புக்கள் தவிர்க்கப்பட்டன.

பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தின வல்வெட்டித்துறை தாக்குதல் தொடர்பாக கூறும்போது; "வல்வெட்டித் துறையில் நடத்திய தாக்குதல்களால் புலிகளை அங்கிருந்து வெளியேற்றி விட்டோம்" என்று கூறினார்.

### விமானத்தாக்குதல்

இக் காலகட்டத்தில் சுவீடன் நாட்டுப் பேராசிரியர் பீட்டர் ஸ்சோக் (PETERSCHALK) யாழ் குடாநாட்டில் தங்கியிருந்தார்.

அவர் சுவீடன் திரும்பியபின்னர் சிறந்த அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார்.

அந்த அறிக்கையில் அரசு கூறிய தகவல்களுக்கும், உண்மைக்கும் இடையிலான தூரத்தை கண்டு கொள்ளலாம்.

அறிக்கையின் ஒரு பகுதி இது; "ஜனவரி 22 தொடக்கம் பெப்ரவரி 1ம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்தபோது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அப்பகுதிக்கு ஆற்றி வரும் அரிய தொண்டுகளை நேரில் பார்க்கும் சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தது.

செஞ்சிலுவைச் சங்கத்திற்கு கூடுதலான ஆதரவுகளை சிறீலங்கா அரசு கொடுக்க வேண்டும். இப் பகுதியில் உள்ள நிலைமையை இராணுவம் தமது அரசாங்கத்திற்கு தெரியப்படுத்துவதில்லை என்பது தெட்டத் தெளிவாகிறது.

பீப்பாக் குண்டுகள் உட்பட சகலவிதமான குண்டுத் தாக்குதல்களையும் அரசு உடனடியாக நிறுத்த வேண்டும். அதேபோல இப்பகுதியில் ஹெலியில் இருந்து பொது மக்களை சுடுவதையும் நிறுத்த வேண்டும்.

வல்வெட்டித்துறையில் 1991 ஜனவரி 20 முதல் 22ம் திகதிவரை ஏற்படுத்தப்பட்ட சேதத்தையும், அழிவுகளையும் நேரில் சென்று பார்க்கும் சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தது.

இதில் ஆச்சரியப்படத்தக்க விடயம் என்னவென்றால், யாழ் நகரிலும் சரி, மற்றும் சகல இடங்களிலும் சரி, புலிகளின் முகாம் ஒன்றுகூட சேதமாகவில்லை. அவை அப்படியே இருந்தன.

வல்வெட்டித்துறையில் இருந்து புலிகளை வெளியேற்றிவிட்டோம் என்று ரஞ்சன் விஜயரத்ன கூறினார். 30.01.1991ல் வெளியான சிறீலங்கா நியூஸ் பத்திரிகையில் 7ம் பக்கத்தில் அச் செய்தி பிரசுரமாகியிருந்தது.

அந்த அறிக்கை எத்தனை பித்தலாட்டமான அறிக்கை என்பதை என்னால் புரிந்துகொள்ள முடிந்தது.

அவரால் கூறப்பட்ட அதே விடுதலைப் புலிகளின் முகாமை 28ம் திகதி நான் பார்வையிட்டேன்.

'பையன்கள்' அப்படியே இருந்தார்கள். ஒருவருக்கும் காயம் ஏற்படவில்லை. முகாமில் சிறு சேதம்கூட ஏற்படவில்லை.



சிவகுரு வித்தியாசாலையில் ஒரு பீப்பாக் குண்டு வெடித்துச் சிதறிக் கிடந்ததைக் கண்டேன். இந்த விசித்திரக் குண்டுகள் ரப்பர். ரசாயனப் பொருட்கள் பெற்றோல் போன்றவைகளால் நிரப்பப் பட்டவை. விமானங்களிலிருந்து தள்ளப்பட்டு கீழே நிலத்தில் விழுந்தவுடன் வெடிக்கக் கூடியவை.

உருகிய நிலையிலுள்ள ரப்பர் துண்டுகள் வெடித்துப் பறந்து, பட்ட இடங்களில் ஒட்டியபடியே எரியக் கூடியவை.

அதிஷ்டவசமாக இக்குண்டு விழுந்த பொழுது மாணவர் ஒருவரும் அங்கே இருக்கவில்லை. கதிரை மேசைகளெல்லாம் சாம்பலாகவும், உடைந்து சுவர்களெல்லாம் கரியாகவும் இருந்தது.

கோவில்கள் பாடசாலைகள் முதலியவற்றில் நடைபெற்ற தாக்குதல்களை நினைத்தால் பயங்கரமாக இருக்கிறது ஏனென்றால், குண்டு வீச்சுகள் நடைபெறும் நேரங்களில் பொது மக்கள் இப்படியான இடங்களில் தான் தஞ்சம் புகுவது வழக்கம்.

"நாங்கள் அதிஷ்டசாலிகள். இம்முறை மக்கள் கோவில்கள் பாடசாலைகள் என ஓடாமல் பதுங்கு குழிகளை பாவித்தார்கள்" என சண்முக சுந்தரம் மேலும் கூறினார்.

கொடூரமான இந்த நான்கு நாள் தாக்குதலில் பத்துப் போ மட்டுமே இறந்தமை இப்பகுதி மக்கள் தங்களை பாதுகாக்கப் பழகிவிட்டார்கள் என்பதையே காட்டுகிறது குடாநாட்டில் அநேகமாக சகல வீடுகளிலும் குழிகளை அமைத்துள்ளனர். வசதி இல்லாதோருக்கு பொது இடங்களில் பதுங்கு குழிகள் அமைக்கப்பட்டுள்ளன.

வல்வெட்டித்துறைத் தாக்குதலுக்கு முன் அந்த ஊர் பொதுமக்களை வெளியேறும்படி 48 மணித்தியால அவகாசம் கொடுத்து துண்டுப்பிரசுரங்கள் ஹெலியில் இருந்து போடப்பட்டதாக ஸ்ரீலங்கா அரசு கூறுகிறது.

### பீதியை உண்டாக்க

வல்வெட்டித்துறையை அழிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் சிறீலங்கா அரசு செயற்பட்டது.

ஜனவரி 20ம் திகதி 12.30 மணியளவில் ஹெலியில் இருந்து துண்டுப்பிரசுரங்கள் போடப்பட்டன. சகலரும் 48 மணிநேரத்தில் வல்வெட்டித்துறையை விட்டு வெளியேறிவிட வேண்டும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

பிரசுரம் போடப்பட்ட மூன்றே கால் மணிநேரத்திற்குள் 3.45 மணியளவில் குண்டு போட ஆரம்பித்து விட்டனர்.

வல்வெட்டித்துறை பிரபாகரன் பிறந்த ஊர். அவர் பிறந்த வீடு இப்பொழுதும் அப்படியே இருக்கிறது.

இராணுவத்தின் கொள்கை என்ன? பொருளாதாரத் தடை விதித்து, குண்டு வீச்சினால் பொதுமக்களுக்கு பீதியை ஏற்படுத்தி புலிகளுக்குள்ள ஆதரவை இல்லாமல் செய்வதே.

ஆனால் உண்மையான நிலை இவர்களின் எதிர்பார்ப்புகளுக்கு எதிர்மாறாக இருப்பதை நான் காணக்கூடியதாக இருக்கிறது.

பல்கலைக்கழக ஆசிரியர்கள், பாடசாலை ஆசிரியர்கள், வாசகசாலைப் பொறுப்பாளர்கள், வீட்டுத் தலைவிகள் போன்ற வயது முதிர்ந்த பலருடன் நான் பேசினேன். அவர்கள் பலர் ஆயுதப் போராட்டத்தை ஆதரிப்பதை அறியக்கூடியதாக இருந்தது.

"எங்களுடைய பெண் பிள்ளைகள் புலிகளுடன் சேர்ந்து போராடுவதை வரவேற்கிறோம்!" என்று பலர் கூறினர்.

அந்த மனிதர்களுடன் பேசும்போது சிறீலங்கா இரண்டாக பிரிந்து விட்டதுபோன்ற உணர்வு ஏற்பட்டது" என்று பேராசிரியர் தனது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

### இந்து விபரிப்பு

யாழ் குடாநாட்டில் குறிப்பாக வல்வெட்டித் துறையில் ஜனவரி 20 முதல் நடைபெற்ற விமானத்தாக்குதல்கள் தொடர்பாக பெப்ரவரி 16, 1991ல் இந்திய ஆங்கில பத்திரிகையான இந்து விபரம் வெளியிட்டிருந்தது.

'இந்து'வின் இலங்கை நிருபராக அப்போதிருந்த தோமஸ் ஏபிரஹாம் விபரங்களை திரட்டி அனுப்பி இருந்தார்.

இதோ அந்த விபரங்கள்:

ஸ்ரீலங்கா விமானப்படை நான்கு நாட்களாக கண்மூடித்தனமாக, ஈவிரக்கமில்லாமல் சாதாரண பொதுமக்களுக்கெதிராக குண்டு வீச்சுக்களை நடாத்தியுள்ளது. ஆட்டிலறி (Artillery) தாக்குதல்களும் குறைந்த பட்சம் ஒரு பீப்பாக்குண்டும் போடப்பட்ட தடயங்களை பார்க்கக் கூடியதாகவிருந்தது.

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் பிறந்த ஊரான வல்வெட்டித்துறையின் பெரும் பகுதி முற்றாக அழிக்கப்பட்ட பொழுதும் அந்த ஊரிலிருந்து விடுதலைப்புலிகளின் முகாம் ஒரு சிறிய சேதமுமில்லாமல் காணப்பட்டது.

ஜனவரி 20 முதல் 23ம் திகதிவரை நடைபெற்ற இந்தக் தாக்குதல்களின் கொடூரமும் இதனால் ஏற்பட்ட அழிவுகளின் விபரங்களும் வெளி உலகத்திற்கு இதுவரை தெரியாமலே இருந்துவிட்டது.

"ஸ்ரீலங்கா இராணுவத்தின் வடமராட்சித் தாக்குதலையும், இந்தியப்படை இவ்வூரில் நடத்திய தாக்குதலையும் விட இம்முறை நடந்த தாக்குதல்கள் மிகவும் கொடூரமானவை. எமது வரலாற்றிலேயே இப்படியொரு அழிவு நடந்ததில்லை" என வல்வை புனரமைப்புச் சபையின் தலைவர் சண்முகசுந்தரம் கூறினார்.

"விடுதலைப்புலிகள் பாவிக்கும் கடலோரங்களில் உள்ள இறங்கு துறைகளையே தாக்கினோம்" என ஸ்ரீலங்கா அரசாங்கம் கூறிய பொழுதும் பொது மக்களையே விமானப்படை வேண்டுமென்றே குறிபார்த்துத் தாக்கியிருப்பது தெட்டத் தெளிவாகத் தெரிந்தது.

100 வருடங்களுக்கு முன் நிர்மாணிக்கப்பட்ட புராதன கோவில்களான சிவன் கோவிலும் முத்துமாரி அம்மன் கோவிலும் சுற்று மதில்களைத் தவிர ஏனைய கட்டடங்களெல்லாம் முற்றாக அழிந்து காணப்பட்டது. வேறு நான்கு கோவில்கள் சேதமுற்றிருந்தன அவ்வூர் தேவாலயமும் குண்டு வீழ்ந்து கூரையே இல்லாத நிலையில் காணப்பட்டது.

ஆனால் அவ்வூர் மக்கள் "ஜனவரி 20ம் திகதி 12 மணியளவில் வல்வெட்டித்துறையில் உள்ள மக்கள் எல்லாம் 48 மணித்தியாலத்திற்குள் வெளியேறிவிட வேண்டுமென ஹெலியில் இருந்து துண்டுப் பிரசுரங்கள் வீசப்பட்டன. ஆனால் மூன்று மணித்தியாலங்கள்கூட செல்லவில்லை. மாலை 3.30 மணியளவில் விமானங்கள் தாக்கத் தொடங்கி விட்டன" எனக் கூறினர்.

இத்தாக்குதல் மாலை 5.30 மணிவரை நடைபெற்றது. அடுத்த நாள் காலை 6 மணியிலிருந்து மாலை 4.30 மணிவரை இதே தாக்குதல் நடைபெற்றது. இதே போல் அதற்கடுத்த நாளும் நடைபெற்றது.

101 வீடுகள் முற்றாக அழிக்கப்பட்டன. 451 வீடுகள் சேதமுற்றது. 6 கோவில்கள், 1 தேவாலயம் 4 பாடசாலைகள் குண்டுத் தாக்குதல்களுக்கு உள்ளாகின. பொது மக்கள் 10 பேர் இறந்துள்ளனர். 20 பேர் படுகாய மடைந்துள்ளனர். சேதமுற்ற தனது வீட்டைக் காண்பித்த டாக்டர் சுந்தரம் மூன்றாவது முறையாக தனக்கு இப்படி நடந்துள்ளதெனக் கூறினார்.

"சாதாரணப் பொதுமக்களைத் தாக்குவதையே ஸ்ரீலங்கா இராணுவம் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. கடந்த சில வாரங்களாக சந்தை கூடும் இடங்கள், கோவில்கள், பாடசாலைகள், அகதி முகாம்கள் போன்ற இடங்களையே தாக்கிவருகிறார்கள்" என யாழ் வாசி ஒருவர் கூறினார்.

"விடுதலைப்புலி போராளிகள் எவரும் இறந்ததாகவோ காயப்பட்டதாகவோ தெரியவில்லை. ஸ்ரீலங்கா அரசாங்கத்திடமிருந்து நியாயம் பெறமுடியாதென்று மக்கள் நினைப்பது சரியானதென்பதையே இந் நிகழ்ச்சிகள் காட்டுகின்றன"

இவ்வாறு தமது நிருபர் தோமஸ் ஏபிரஹாம் தெரிவித்த விபரங்களை இந்து வெளியிட்டிருந்தது.

### புலிகள் அறிக்கை

புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த யாழ் குடாநாட்டில் விமானப் படையினர் தொடர்ச்சியாக நடத்திய தாக்குதல்கள் தொடர்பாக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

"விடுதலைப் போராட்டம் வளர்ச்சியடைந்து வரும் வேளையில், எதிரி தொடுத்துள்ள உளவியல் ரீதியான போர் உபாயம் தான் இன்று நடந்து கொண்டிருக்கும் விமானக் குண்டுவீச்சு.

எமது மக்களை அவர்களது சொந்த இடங்களில் இருந்து விரட்டி அவர்களை அநாதரவான நிலைக்கு தள்ளுவதே அரசின் திட்டம்.

தமக்கு தேவையான யாழ் கோட்டை இராணுவ முகாமையோ, மாங்குளம் இராணுவ முகாமையோ தொடர்ந்து தக்கவைக்க முடியவில்லை. இந்நிலையில் வல்வெட்டித் துறையில் புதிய முகாமை அமைக்க படைகள் நினைக்கின்றன.

விமானக் குண்டு வீச்சு என்னும் உளவியல் போருக்கு அஞ்சாமல், நாம் தற்காப்பு நடவடிக்கைகளில் இறங்க வேண்டும்.

ஒவ்வொரு பொதுமகனும் பதுங்கு குழியை நிறுவவேண்டும்!" என்று புலிகளின் மக்கள் முன்னணி அறிக்கை வெளியிட்டிருந்தது.

### வன்னியில் தாக்குதல்

அரசின் விமானப் படையினர் யாழ் குடாநாட்டில் மட்டுமன்றி வன்னியிலும் 1991 ஜனவரியில் குண்டுத் தாக்குதல்களை நடத்தினார்கள்.

01.02.1991ல் அதிகாலை 3.45 மணியளவில் புதுக்குடியிருப்பில் குண்டு வீசப்பட்டது. 300 கிலோ கிராம் எடையுள்ள அக் குண்டுக்கு 16 குடிமக்கள் பலியானார்கள்.

பாடசாலை ஒன்றில் அகதிகளாக தஞ்சமடைந்திருந்த திருக்கோணமலை மாவட்டத்தைச் சேர்ந்தவர்களே பலியாகினர்.

பாடசாலைமீது குண்டுவீச்சு நடத்திவிட்டு, புலி முகாம் நிர்மூலம் என்று செய்தி கூறப்பட்டது.

மன்னார் ஆண்டாள் குளத்தில் 28.01.91ல் நடைபெற்ற குண்டுவீச்சில் வே.மகேஸ்வரன் (30) என்னும் இளைஞரது உடல் சிதறியது. அங்கிருந்த றோமன் கத்தோலிக்க பாடசாலையின் மூன்று கட்டடங்களும், கூட்டுறவுத் திணைக்கள செயலகமும் சேதமடைந்தன.

இத்தாக்குதல்களிலும் புலிகளுக்கு எவ்வித சேதமும் ஏற்படவில்லை.

(தொடர்ந்து வரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்